அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கொடைக்கானல் - 624 101

GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE FOR WOMEN KODAIKANAL

தமிழ்த்துறை குறிஞ்சி மன்றம்

கவிமுகி

பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

Kavimugi International Journal of Tamil Research is a Peer reviewed Printed Journal

ISSN 2950-6611 இலங்கை

# பன்னாட்டுக் கருத்தரங்க சான்றிதழ்

அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 30.10.2023 அன்று நடைபெற்ற

சங்க கால முதல் சமகால வரை இலக்கியங்களின் நோக்கும் போக்கும் என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில்

முனைவர் / திருமதி / திருமிகு சு.ர. பூங்கொடி அவர்கள்

பாமாவின் நாவலில் பெண்ணின் ஒடுக்கப்பட்ட உரிமைகளும் மேலெழுந்த போராட்டங்களும் என்ற தலைப்பில்

ஆய்வுக் கட்டுரை வழங்கியமைக்காக / பங்கேற்றமைக்காகப் பாராட்டிச் சான்று அளிக்கப்படுகிறது

முனைவர் வெ.முத்துலட்சுமி
முதன்மை ஆசிரியர்,
கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ், இலங்கை

முனைவர். ர.மங்கையர்க்கரசி
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்த்துறை

முனைவர் ஜா.ஸ்.ஏஞ்சலின்
முதல்வர், அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி,
கொடைக்கானல்

Scanned with OKEN Scanner

GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE FOR WOMEN
KODAIKANAL

# அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி

கொடைக்கானல் - 624 101

## தமிழ்த்துறை குறிஞ்சி மன்றம்

மற்றும்

## கவிமுகி

பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

Kavimugi International Journal of
Tamil Research is a Peer reviewed Printed Journal

**ISSN 2950-6611**

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்விதழ்

# சங்ககால முதல் சமகாலம் வரை இலக்கியத்தில் நோக்கும் போக்கும்

**30 அக்டோபர் 2023**

பதிப்பாசிரியர்

**முனைவர் ர.மங்கையர்க்கரசி**

அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவை
இலங்கை.

Scanned with OKEN Scanner

56. அகத்திணைச் செய்யுட்கள் புலப்படுத்தும் ஐந்திணைசார் மக்களின் வாழ்வியல் 204
முனைவர்.வா.பேபிதுமாணி

57. சமூக நோக்கில் அம்பை சிறுகதைகளில் பெண்கள் 209
வி. காவ்யா

58. இந்திய மக்களின் உணவுமுறைகள் 213
க.முத்து மீனாள்

59. வள்ளலார் கண்ட அறநெறிச் சிந்தனைகள் 216
லை.சுஜுலிஸ்

60. பத்துப்பாட்டில் திணைச்சூழலியல் 221
முனைவர் க.இளமாறன்

61. சங்கத் தமிழரின் மேலாண்மை 'வேளாண்மை' 225
முனைவர் சி. சொர்ணமாலா,

62. திருக்கார்த்தியலின் சிறார் வாழ்வியல் 228
க.ஜோதி

63. தொகை நூல்கள் வழி அறியலாகும் வாழ்வியல் செய்திகள் 231
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி

64. தொல்காப்பியத்தில் தொல்காப்பியரின் மொழி ஆளுமை 235
திருமதி க வெண்ணிலா

65. சிலம்பைச் சிறப்பிக்கும் பெண்டிர் 240
முனைவர் பா. லயோலா ஆலியட் மேரி

66. 'மாதுமாகி' நாவலில் பெண்ணின் மறுக்கப்பட்ட உரிமைகளும் மீண்டெழுந்த போராட்டங்களும் 243
முனைவர் க.ப. பூங்கொடி,

67. திரிகடுகத்தில் மதிப்புகள் 247
அ.நாகஜோதி

68. இராசராசசோழனுலாவில் இராசராசனின் தலைமைத்துவ மாண்புகள் 250
முனைவர்.பா.இங்கிரிட் போலின்

69. நெடுநல்வாடையில் உளவியல் நோக்கு 253
முனைவர். கிளாடின்சுஜிலா

70. வைணவம் உணர்த்தும் கூடற்புராணம் 255
முனைவர்.கு.க.ஜெயபுரி

71. இலக்கியத்தில் விவசாயம் 259
முனைவர். தா.மஞ்சுஷா

72. விளையாட்டு : சில அடிப்படைக் கருத்துகளும், திராவிட விளையாட்டுகளும் 264
திருமதி.ரா.விஜி

73. சங்கஇலக்கியம் காட்டும் கூந்தல் ஒப்பனைகள் 267
முனைவர்.செ. மெஜிலாஜீவி

74. புறநானூற்றில் வேளாண் தொழில் நுட்பங்கள் 269
முனைவர் ஜோ.சகாய பவுலின்

Scanned with OKEN Scanner

# ‘யாதுமாகி’ நாவலில் பெண்ணின் மறுக்கப்பட்ட உரிமைகளும் மீண்டெழுந்த போராட்டங்களும்

முனைவர் சூ.ர. பூங்கொடி,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி, மதுரை.
கைபேசி எண் : 6374807592 sr.poongodi1979@gmail.com

முன்னேறிச்சென்று கொண்டிருக்கும் பாதையில் எத்தனை விதமான தடைக்கற்கள் அத்துணை தடைக்கற்களையும் தாண்டி ஒரு பெண் தன் இலக்கை நோக்கிப் பயணிப்பது என்பது 1930-40களில் கடினமான ஒன்றாக இருந்திருக்கின்றது. தடைக்கற்களாக இருந்த சமூகச்சூழல்களையும் சூழல்களின் கடுமைகளையும் தாண்டி சாதனைச் சிகரத்தின் உச்சியில் ஏறி நின்றதோடு மட்டுமல்லாமல் தன்னைப் போல பலரையும் ஏற்றி விட்டிருக்கிறார். இந்நாவலின் கதாநாயகியான உமா. அவளின் சிறகுகள் விரிந்த தருணங்களைப் படைப்பாசிரியர் எம்.ஏ.சுசீலா அவர்கள் தற்கூற்றுப் பாணியில் விவரிக்கிறார்.

## ஆய்வுச்சுருக்கம்

மூன்று தலைமுறைகளின் முழுமையான படைப்பாக விளங்கும் யாதுமாகி நாவலில் பெண் ஆளுமைகளைப் பற்றியும் அவர்களின் முற்போக்கான சிந்தனைகள் உதித்த தருணங்களுக்கான வாழ்க்கைப் போராட்டங்களையும் மிக இலகுவாக நாட்குறிப்புகளுடன் கூடிய பதிவுகளைக் கட்டியிருந்த போதிலும் மூத்த தலைமுறையான உமாவின் வரலாறு பிரமிப்பூட்டுகிறது. கதையின் துவக்கத்திலிருந்து ஒரு தனிப்பட்ட ஆளுமையுடன் உமா காட்சி தருகிறாள்.

தான் கடக்க வேண்டிய பாதையைத் தானே செப்பனிட்டுக் கொண்டு தனி மனுஷியாக தொடர் போராட்டங்களைச் சந்தித்து, முற்போக்குச் சிந்தனைகளை உயிர்த்துக் கொண்டு வளைய வருகிறாள். தமக்கு நேரும் பிரச்சினைகளுக்கு முடிவுகளை எடுப்பதிலிருந்து தேவையில்லாதவற்றை புறம் தள்ளிவிட்டு அடுத்தடுத்த கட்டங்களுக்கு இயல்பாக கடந்து செல்லும் யதார்த்தப்பெண்மணியாகவும் இருக்கிறாள்.

தனக்கு மறுக்கப்பட்ட உரிமைகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து மீண்டெழும் கதாநாயகியாக அறிமுகப்படுத்தப்படும், நாவலில் முழுமையான ஆதிக்கம் செலுத்தும் தேவியை, விரிவான கண்ணோட்டத்துடன் இக்கட்டுரை வெளிச்சமாக்குகிறது. மறுக்கப்பட்ட கல்வியும் மீண்டெழுந்த கல்வியும் சங்க காலத்தில் பெண்களுக்குத் தடையாக கல்வி இருந்ததில்லை என்பதை சங்க்காலப் பெண்பாற் புலவர்கள் மூலம் அறியமுடிகிறது. பின்பு பெண் கல்வி கற்க பெரும் தடை இடையில் ஏற்பட்டது. பெண்களின் ஆளுமையையும் அறிவையும் பற்றி அறியாத சில் மூடர்கள் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று கூறி அவளுக்கு எவ்வித சுதந்திரத்தையும் அளிக்க மறுத்து அவளை வீட்டிற்குள்ளேயே முடக்கிப் போட்டனர்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்”

என்று பாரதியாரும்,

“கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்
அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை.”

என்று பாரதிதாசனும் பெண் கல்விக்காகப் போராடியதால் இன்று பெண்கள் கல்வியின் உச்சத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் மட்டுமின்றி பெரியார், கலைஞர் அண்ணா, காமராசர் என பல தலைவர்களும் எழுத்தாளர்களும் கூட பெண் கல்விக்காகப் பாடுபட்டுள்ளனர். இந்நாவலில் தேவி தன்னுடைய கல்விக்காகவும் தன் வாழ்க்கைக்காகவும் போராடியதைப் படிக்கும் பொழுது இன்று நாம் பெற்றுக்கொண்டிருக்கும் கல்விச்சுதந்திரம் அவர்கள் பெற்றுத்தந்ததின் வரமாக அவர்களை நன்றியுடன் நினைவு கூர்வதைத் தவிர்க்க முடியாது.

கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் கணவனை இழந்த பெண்களும் தனக்கான வாழ்க்கையைத் தேடிக் கொண்டாலும் கூட தன்னைப் போன்ற பெண்களும் தன்னைப்போல் முன்னேற வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்ட பல பெண்கள் இருந்தனர்.

குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து வைக்கப்பட்டு மணமான ஒரு சில நாட்களிலேயே தன் கணவனை இழந்து தன் தந்தையின் உதவியால் உயர்கல்வியைப் பெற்ற, சகோதரி சுப்புலெட்சுமி தன்னைப் போலவே பல பெண்கள் விதவைகளாக ஆக்கப்பட்டதையும் அவர்கள் குடும்பத்தாரால் கைவிடப்பட்டு இருந்ததையும் எண்ணி 1912இல் விதவைகளுக்கான விடுதி ஒன்றைத் தொடங்கி பல பெண் விதவைகளுக்கு அடைக்கலம் வழங்கினார்.

தேவிக்கும் சிறு வயதிலேயே திருமணம் நடக்கிறது பத்து வயது கூட நிரம்பாத தேவிக்கும் பதினெட்டு வயது பையனுக்கும் திருமணம் நடந்து முடிகிறது. திருமணம் நடந்து முடிந்து ஆறுமாதத்தில் மாப்பிள்ளை இறந்து விட குழந்தை விதவையாகிறாள் தேவி. இந்தத் திருமணத்தில் கொஞ்சமும் விருப்பமில்லாத தந்தை சாம்பசிவம் இச்சம்பவத்தால் நொறுங்கிப் போகிறார்.

“இப்ப உனக்குத் திருப்திதானேம்மா”

என்று கூறும் வார்த்தைகளிலிருந்து இதை அறியமுடிகிறது. பத்துவயது கூட நிரம்பாத ஒரு குழந்தை தனக்கு நேர்ந்துள்ளதைக்கூட அறியமுடியாமல் இருப்பதைப் பார்க்கும்போது இந்நிலைமைக்குக் காரணம் நானென்று நினைத்து நினைத்துப் பின்பு அவளுக்குக் கல்வி தான் தேவை என்பதை உணர்ந்து கொள்கிறார்.

இத்தனைக்கும் தான் படித்தவராய் இருந்திருந்தும் ஆசிரியராய் இருந்தும் அன்னிபெசன்ட் அம்மையாரின் கருத்துக்களை உள்வாங்கக் கூடியவராய் இருந்தும் ஒரு குழந்தை மணக்கட்டாயத்திற்கு ஆட்படுகிறார் பின்பு அதற்குப் பிராயச்சித்தமாய் தேவியைப் படிக்க வைக்க சகோதரி சுப்புலெட்சுமியின் விடுதியில் சேர்த்து விட்டு அவளுக்குத் தினமும் மாலையில் பாடங்களைக் கற்றுத் தரும் ஆசிரியராகவும் உருவெடுக்கிறார். அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு குற்ற உணர்ச்சி தன்னைப் பிணைத்திருப்பதை அவரால் அறியமுடிகிறது.

வாயில் முகப்பைத் தாண்டி சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தும் சாம்பசிவம் மேல் படியில் அமர்ந்தபடி தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் தேவியைப் பார்க்கிறார். அவளை நிமிர்ந்து பார்க்கவும் கூசியபடி குற்ற உணர்வின் குறுகுறுப்போடு அவளருகே செல்கிறார்

இவ்வரிகள் தன்னால் தன் குழந்தையின் வாழ்க்கை பாழாகிவிட்டதே என்ற ஒரு தந்தையின் இயல்பான ஒரு மனநிலையைப் பிரதிபலிக்கிறது. தேவியின் தந்தை இறந்துவிட்ட பிறகு மாமாவின் வீட்டில் அடைக்கலம் புகுந்தபின்பு அண்ணாவான் பாகவதர்,

**“சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே இந்த கம்மனாட்டிப் பொண்ணை நீ என்ன இப்ப கலெக்டராவா ஆக்கிடப்போறே”**

என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே தேவியின் தாயார் இந்த வருடத்தோடு படிப்பை முடித்து விடுவேன் என்கிறார். எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் தேவி வெற்றி பெற்ற பின்பு,

**“இந்தப் பொட்டச்சி பாஸாகி என்னத்துப் பிரயோஜனம்? பேசாம இவ தோத்து அவன் ஜெயிச்சிருக்கப்படாதோ?”**

என்கிறார் மாமாவின் மற்றொரு விதவை சகோதரி. தேவியின் மாமனார்,

**“இதோ பாருங்கோ சாம்பசிவம்! அவ படிச்சு வேலை பார்த்து தான் குடும்பம் நடத்தாகணுங்கிற அவசியம் எங்களுக்குக் கிடையாது அப்படி ஒரு அகௌரவத்தை மட்டும் எங்களுக்கு தயவு பண்ணி உண்டாக்கிடாதீங்கோ”**

என்றபடி கைகூப்புகிறார்.

பிற்காலத்தில் தேவியில் சம்பாத்தியம் தான் அவள் அம்மாவின் மாத்திரைச் செலவுக்குப் பயன்பட்டது என்ற உண்மையை மறுக்கமுடியாது. பெண்பிள்ளை சம்பாதித்தால் அது தனக்கு அவமானம் என்று நினைப்பவர்கள் தான் தனக்கு ஆண்பிள்ளை வேண்டும் என நினைப்பார்கள்.

**“அந்த எண்ணம் மக்கள் மனசிலேர்ந்து மாற வேணும்னா 50 சதவிதம் பெண்களுக்கு உத்தியோகம் 50 சதவீதம் ஆண்பிள்ளைக்கு உத்தியோகம் என்று சட்டமாக்கி விடவேண்டும். அப்படியானால் பெற்றவர்களுக்கு ஆண் இருந்தாலும் ஒன்றுதான் பெண் இருந்தாலும் ஒன்றுதான் இப்பொழுது ஆண் பிள்ளைகள் எல்லாம் உத்தியோகம் பார்க்கிறார்கள் பெண்பிள்ளைகள் எல்லாம் வீட்டில் இருக்கிறார்கள். அதனாலேயே நமக்கு ஒரு ஆண்பிள்ளை வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதை ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாக்கிவிட்டால் பிரச்சினை தீர்ந்தது”** (தந்தை பெரியார் அறிவுரை 100, ப. 12)

தந்தைப் பெரியாரின் கனவு நிஜமாவது போல் இப்பொழுது பெண்களுக்கு 35% இடஒதுக்கீடு கிடைத்திருக்கிறது. விரைவில் 50% இடஒதுக்கீடு விரைவில் கிடைத்து விடும் என்னும் நம்பிக்கை இருக்கிறது.

**மீண்டெழுந்த கல்வி**

தேவியின் அப்பாவால் தொடர்ந்த கல்வி, அவர் இறப்பிற்குப் பின்னால் அவளின் அண்ணனின் மேற்பார்வையில் தொடர்ந்தது.

**“ஆமாம், இவ ஏன் இப்படி வீட்டிலேயே இருக்கா? அப்பா போயிட்டார்னா அதோட இவளோட படிப்பும் போயிடணுமா? ஏன் இவளை உடனே ஹாஸ்டல்லே கொண்டு போய் விடாம வீட்டிலேயே வச்சிண்டிருக்கேள்!”**

என்று கேட்டதோடு நில்லாமல் சுப்புலெட்சுமி அம்மாளின் விடுதியில் சேர்த்து விட்டுச் செல்கிறாள். ஓர் ஆணால் கைவிட்டுப்போன கல்வி இன்னொரு ஆனால் தொடர்கிறது. உயிர்க்கொலையை விட உணர்வுக் கொலை கொடுமையானது என்ற பெரியாரின் வாக்கிற்கேற்ப பெண்களின் படிப்பிற்குத் தடை போட்ட சமூகத்திற்குப் பெரியார் மேலும்,

**“தற்போது பெண்களுக்குப் படிப்பும் வேலையும் இல்லாததால் தான் ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டுமென்ற நிலை இருக்கிறது. பெண்கள் ஆண்களைப் போன்று துணிவாக நடந்து கொள்ள வேண்டும். பெண்கள் தனியாக வாழமுடியும் எதையும் சாதிக்க முடியும் என்கின்ற நிலையில் வாழவேண்டும். சுதந்திரமாக கவலையற்று வாழ தொல்லையற்று வாழ அறிவைக் கொண்டு சிந்தித்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்”.** (பெண் ஏன் அடிமையானாள், பக். 7-8)

என்று கூறியது மட்டும் அல்லாமல் அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் பெரியார். அக்காலகட்டத்தில் மிகப்பெரிய எழுத்தாளரான அ. மாதவையா கூட தன் மகளை விதவை என்னும் நிலைமைக்கு ஆளாக்கியவர் என்ற உண்மையைப் படிக்கும் பொழுது அக்காலச் சூழல் சற்றே மிரட்சியைத் தருகிறது. அவரின் மகள் மீனாட்சி விதவையாக ஆன பின்பு, தேவியின் அப்பா சாம்பசிவத்தைப் போலவே குற்ற உணர்வால் தாக்கப்பட்டு பின்பு மீனாட்சியை வெளிநாட்டுக்கு அனுப்பி ஆங்கிலப் பேராசிரியராக ஆக்கிவிட்டு ஓய்ந்தார்.

தான் மட்டுமல்ல, தன்னைப் போலவே பாதிக்கப்பட்டிருக்கும் தேவியிடம் உள்ள தயக்கங்களைப் போக்கியதில் மீனாட்சிக்கும் பெரும் பங்குண்டு என்பதை பின் வரும் வரிகள் உணர்த்துகிறது.



Scanned with OKEN Scanner

**"இதோ பாரு தேவி! இங்கே வெளிப்பார்வையிலே ஆடம்பரமா இருக்கிற எதைப்பார்த்தும் நீ மலைச்சோ தெகச்சோ ஒதுங்கிப் போய்விடக்கூடாது இந்த உலகத்தை ஜெயிக்க நம்ம கையிலே கெடச்சிருக்கிற ஒரே ஒரு ஆயுதம் இந்தப்படிப்பு மட்டும் தான். அதை ஆதாரமா வச்சு இன்னும் பலதையும் தெரிஞ்சுக்க வாய்ப்பு கிடைக்கும் போது அதை தவறவிட்டுட்டு ஒதுங்கிப்போய்விடக்கூடாது. இங்கே இருக்கிற வித்தியாசமான பல பேரோடயும் பழகணும் அப்பதான் நீ நெனச்சிண்டிருக்கிறது மட்டுமே உலகமில்லைன்னு உனக்குப் புரியும்"**

கல்வி மட்டும் தான் பெண்களுக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு ஆயுதம் என்று மீனாட்சி கூறுவதிலிருந்து, பெண்களின் அறிவை விரிவாக்கி அவர்களை மீட்டெடுக்கிற சக்தியாக கல்வி உருவெடுக்கிறது எனலாம்.

***மீண்டெழுந்த மறுமணம்***

கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்வது பாவம் என்று நினைத்த காலத்தில் தேவி மறுமணம் செய்ய முடிவெடுப்பது ஒரு முற்போக்கான சிந்தனையாகத் தான் கருத முடிகிறது.

**"நான் இப்ப கல்யாணம் செஞ்சுக்கப் போறேன். எனக்குன்னு ஒரு உலகத்தை அமைச்சுக்கப் போறேன்"**

என்று கூறும் தன் மனதில் திருமண ஆசை தனக்குள் எங்கோ ஒளிந்துள்ளதை தேவி எடுக்க அவளுக்கு நிறைய வருடங்கள் தேவைப்பட்டிருக்கிறது. விதவைப் பெண்கள் தலையை மழித்துக் காவி கட்டிக்கொள்ள வேண்டும் என்ற கொடுமையிலிருந்து விடுபட்டதை சாதனை என்று கூறுவதை விட முற்போக்குச்சிந்தனை முளைவிட்டிருக்கிறது என்று கூறலாம்.

**"தேவி! உன் வயசுப் பொண்ணுகளெல்லாம் கலர்கலரா உடுத்திண்டு வரதைப் பார்க்கும் போது உன் மனசிலேயும் எத்தனை ஆசை இருக்கும்னு எனக்கு நன்னாவே புரியறது. ஆனா எங்களை மாதிரி உன்னையும் தலையைச் சிரைச்சு அலங்கோலப் படுத்தாம விட்டாளேன்னு நெனச்சுக்கோ. காலம் மாறும் அதுவும் கொஞ்சம் கொஞ்சமாத் தான்"**

என்று கூறுவதிலிருந்து காலம் மாறும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் மனதுக்குள் உறைந்து கிடக்கும் ஏக்கங்களை வெளிப்படுத்துகிறாள் தேவியின் அம்மா. அந்த ஏக்கத்தை எல்லாம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் முதலில் மறுமணம் செய்யவேண்டும்.

**"எனக்குன்னு ஒரு குழந்தை வேணும்கிற ஆசை என்னோட அடிமனசுக்குள்ளே எங்கியோ ஊறிக் கிடந்திருக்கு. அதுதான் இந்த முடிவுக்கு ஒரு தூண்டு கோலா இருந்திருக்கும்னு நினைக்கிறேன்."**

என்று மறுமணம் செய்யும் ஆசையை வெளியிடுகிறாள் தேவி.

**"மறுமணம் என்ற சொல்கூட தேவியைப் பொறுத்தமட்டில் தவறு. ஏனென்றால் முதல் திருமணம் பொம்மைத் திருமணம் போலத்தானே நடந்தது. விதம் விதமாய் கட்டிக்கொண்ட பட்டுப்புடவைகள் தேவியின் திருமண ஆசையை வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன"**

***மறுக்கப்பட்ட கல்வி மீண்டெழுந்த வேலை வாய்ப்பு***

**"சாம்பசிவம் செத்தப்ப என்னை அண்டி எல்லோரும் வந்தேன் உன்பணத்தையும் என்கிட்ட கொடுத்து வச்சிருந்தே! சரி அது என்ன ஊறுகாபோட்ட மாதிரி இத்தனை நாள் அப்படியாவா இருக்கும்...... இவ ஒருத்திக்கே எல்லாத்தையும் செலவழிச்சிட முடியுமா?"**

என்று தேவியின் மாமா தேவி மேலும் படிக்க அனுமதி மறுத்து விட அவளின் படிப்புக்காய் போராடினாள் அவள் தாய்.

**"இல்லேண்ணா, ஏதோ கொழந்தை இந்த மட்டுக்கும் படிச்சிட்டா! இன்னும் ஒரே ஒரு வருஷம் மட்டும் பல்லைக்கடிச்சிண்டு எல்.டி படிச்சிட்டாள்னா ஏதாவது ஒரு ஸ்கூல்ல நிரந்தரமா உத்தியோகம் கெடச்சிடும்"**

என்று கூறுவதிலிருந்து தன்னைப்போல உறவுகளிடத்தில் அண்டிப் பிழைக்கும் பிழைப்பு அவளுக்கும் வந்துவிடக்கூடாது என்று உள்மனதுக்குள் தாம்பட்ட கஷ்டம் தன் மகள் பட்டுவிடக் கூடாது என்பதில் இருக்கக் கூடிய கவனம் அக்காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனாலும் எப்படியாவது தன் மகளைக் கரை சேர்த்து விட வேண்டும் என்ற துடிப்பு மனதிற்குள் ஆழமாக இருந்ததை மேற் சென்ற வரிகளில் காணமுடிகிறது.

**"இதற்கு மேலே படிக்க முடியாதென்ற நிலை வந்தபோது கூட தேவி கலங்கவில்லை. வேலைபார்த்துக் கொண்டே சம்பளம் வாங்கி அதில் படிப்பதாக தன்னை இன்னும் மெருகேற்றிக் கொள்கிறாள். படிப்பு மட்டுமே இவ்விதமான சிந்தனையைக் கற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை."**

**"சரிம்மா விட்டுத்தள்ளு ட்ரெயினிங் எடுத்துக்காம வேலை பார்க்கிற டீச்சர்ஸ் கொஞ்சம் பேர் இருக்கா அந்த மாதிரியே நானும் இப்ப சேர்ந்துண்டு ரெண்டு வருஷம் வேலை பார்த்தேன்னா அதிலே கெடைக்கிற சம்பளத்தைச் சேர்த்து வச்சு அப்புறமா எல்.டி யை முடிச்சுக்கலாம்"**

என்று தனக்குக் கிடைக்காத கல்வியை எப்படியும் பெற்றுவிடலாம் என்ற தன்னம்பிக்கையை தனக்குத் தானே ஊட்டிக் கொள்கிறாள் தேவி.

***மறுக்கப்பட்ட சொத்துரிமை மீண்டெழுந்த சொந்தவீடு***

ஆரம்ப காலத்தில் பெண்களுக்கு சொத்துரிமை கிடைக்காமல் இருந்தது. கணவனை இழந்த பெண்கள், தனது சகோதரன் குடும்பத்திலோ அல்லது தன் மகனுடைய குடும்பத்திலோ அண்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது தேவியின் அம்மாவும் இதிலிருந்து தப்பிக்கவில்லை. அவளுடைய அண்ணன் வீட்டிலே தன் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு அதிலும் விதவையாகி விட்ட தன் மூத்தமகளான தேவியை வைத்துக் கொண்டு தான் வைத்திருந்த மிச்ச மீதி பணத்தையும் அண்ணனிடம் கொடுத்து விட்டு கிட்டத்தட்ட ஒரு ஊமை மனுஷி போலவே வாழ்ந்து வருகிறாள். அவளுக்கென்று சொந்தமாக சொத்து என்று எதுவுமே இல்லாத்தால் அடுத்தவரின்



Scanned with OKEN Scanner

உதவியை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியிருந்தது.

திருமணமாகி குழந்தை இல்லாவிட்டால் மறுமணமும் செய்யாமல் இருந்தால் கூடப் பிறந்தவர்களின் நிழலில் ஒதுங்கி வாழவேண்டிய கட்டாயத்தில் இருப்பது எழுதப்படாத விதிகளில் ஒன்று. தேவிக்கும் அந்நிலை வருகிறது. ஆனால் தேவியோ படாதபாடுபட்டுப் படித்து ஒரு வேலைக்கும் செல்பவள். ஆகவே அவள் சம்பாத்தியம் எல்லாம் அவளுடைய தம்பிகளுக்கு தான் என்று உறவுகள் பேசும் போது உடைந்து போகிறாள்.

அவளுக்கென்று ஒரு பந்தத்தை, உறவை ஏற்படுத்த வேண்டும் என்ற அக்கறையும் இல்லாமல் இறுதி வரைக்கும் அவளுடைய பணத்திற்கே குறிவைக்கும் கூட்டதைக் கண்டு மனவருத்தம் அடைகிறாள் தேவி. தேவியின் தம்பி மாமனார், அவளுடைய படிப்பை பாதியில் நிறுத்திவிட வேண்டும் என வற்புறுத்தியவர் அதிலிருந்து மீண்டு எழுந்து ஒரு நிலைமைக்கு வந்தவுடன் அவளுடைய பணத்துக்கும் பாதுகாப்பு இல்லாத நிலையை உருவாக்குகிறார்.

**"என்ன மாப்பிள்ளை, இதைப் போய் இவ்வளவு தயங்கித் தயங்கிக் கேட்டுண்டு? தேவிக்கு என்ன குழந்தையா? குட்டியா? உங்களுக்கெல்லாம் செய்யாம அவ வேற யாருக்குச் செய்யப்போறா அவளுக்கு வயசானப்பறம் அவ உங்களை மாதிரி தம்பிகளோட தானே இருந்தாகனும்"**

என்று கூறுவதிலேர்ந்து ஒரு பெண் பிறந்ததிலே இருந்து இறப்பு வரைக்கும் யாராவது ஒரு ஆணின் துணையில் தான் வாழ்ந்தாக வேண்டும் என்ற சமூகத்தின் கட்டுப்பாடுகளை அறியமுடிகிறது. ஆனால் தேவி இக்கட்டுப்பாடுகளைத் தகர்த்துத் தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறாள். தன்னந்தனியாக இருந்து ஒரு வீட்டையும் கட்டிக்கொள்கிறாள்.

முடிவுகள்

ஒரு பெண் தனியாக தன்னுடைய வாழ்வை எதிர்நோக்குவதற்கு நிச்சயமாக கல்வி மிகவும் தேவை என்பதை இந்நாவல் எடுத்துக்காட்டுகிறது.

சுலபமான முடிவுகளை எடுப்பதற்கும், எடுத்த முடிவுகள் பிறரை பாதிக்காத வண்ணம் செயல்படுத்துவதில் பெண்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பதையும் நமக்கு தெளிவாக்குகிறது இந்நாவல்.

அக்காலச் சூழலிருந்து பெண்கள் வெகுவாக விடுபட்டாலும் கூட தங்களுக்கான அடையாளத்தைப் பெறுவதில் நாம் இன்னும் பின்தங்கியுள்ளோம் என்பதையும் உணரமுடிகிறது.

துணைநின்ற நூல்கள்

1. பெரியார், பெண் ஏன் அடிமையானாள், வளரி வெளியீடு.
2. கலி.பூங்குன்றன்(தொ.ஆ..),தந்தை பெரியார் அறிவுரை–100, பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.



Scanned with OKEN Scanner

கவிமுகி
பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research is a Peer reviewed Printed Journal
ISSN 2950-6611

பழமையான மொழி, பண்பட்ட மொழி, பைந்தமிழ் மொழி, தேனினும் இனிய தீந்தமிழ் மொழியென்றால் தமிழ் மொழிதான் என்று கூறுவது மிகையாகாது. தமிழ் எளிமையான, இனிமையான மொழியாக திகழ்கிறது. தமிழ் மொழியானது இலக்கிய மரபினைக் பிரதிபலிக்கக்கூடிய காலக் கண்ணாடியாகும். தமிழ் இலக்கியங்கள் அன்றைய மக்களின் நிலவியல் சார்ந்த சூழலைக் கையகப்படுத்தி இயற்கையைப் பேணி பாதுகாத்து அதனோடு இயைந்த வாழ்வியலைக் கற்றுக்கொடுத்தது. அதுமட்டுமின்றி, இம்மொழி இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஆட்சிமொழியாகவும், உலகமொழியாகவும் திகழ்கின்றது. இன்றையக் காலச்சூழலில் பல்வேறு நாடுகள் தமிழ்மொழியைச் சிறார்களுக்குக் கற்றுக்கொடுக்கின்றனர். ஆய்வாளர்கள் தமிழ் இலக்கியத்தைப் பல்வேறு தளங்களில், பலகோணங்களில் ஆய்வுக்குட்படுத்துகின்றனர்.

இவ்வுலகவாழ்வுக்கே இலக்கிய - இலக்கணம் வகுத்த வண்டமிழ் மொழியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது. இலக்கண அமைப்பில் புதுமை கொண்ட பெருமை தமிழுக்கே உரியது. இவ்விலக்கணம் தொல்காப்பியரின் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று இயலின் மூலமாகத் தமிழ் எழுத்துக்களின் முக்கியத்துவத்தையும், போற்றுதலுக்குரிய வாழ்வின் ஒழுக்கத்தையும் எடுத்துரைக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்டது. தமிழ் இலக்கியங்களில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் காப்பியங்களும் தமிழின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. அவ்வாறே, பன்னிருதிருமுறைகள், நாலாயிரத் திவ்யப்பிரபந்தங்களும் பக்திமணம் பரப்புகின்றன. நல்வழி, மூதுரை, உலகநீதி, கொன்றைவேந்தன் போன்ற நீதிநெறி நூல்களும் மக்களுக்கு அறவழிகாட்டிகளாய்த் திகழ்கின்றன.

இவ்வாய்விதழ் சங்ககாலம் முதல் சமகாலம் வரை மக்களின் பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும், கலைச் செயற்பாடுகளையும் இலக்கியங்கள், கள ஆய்வுவாயிலாக ஆராயும் விதமாக படைக்கப்பட்ட இருக்கிறது. மேலும், சமூகங்களின் உள்ளத்து உணர்வுகளையும், கற்பனை வளத்தையும், படைப்பாற்றல்களையும், திறன்களையும் ஆராய்ந்து இவ்விதழுக்குச் சமர்ப்பிக்கலாம். காலனிய நீக்கம், அறிவின் அதிகாரவிமர்சனம், படைப்பிலக்கியமையம், ஆற்றுகைமையம், விளிம்புநிலைப் பார்வை, பன்மைத்துவ அணுகுமுறை, பெண்ணியல் சிந்தனை, சூழலியல் நட்பு ஆகிய எண்ணக்கருக்களையும், புதியகோட்பாட்டு அணுகுமுறைகளையும் பகுப்பாய்வு செய்து இவ்வாய்விதழில் சமர்ப்பிக்கலாம்.

ஆய்வாளர்களது ஆய்வுக்கட்டுரைகள் பன்னாட்டளவில் மதிப்பீடுச் செய்யப்படும். மதிப்பீடுச் செய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை ஆசிரியர்குழுவின் மேற்பார்வையில் ஆய்வாளர்களின் கவனத்திற்குக் கொண்டுச் செல்லப்பட்டு, பின்னர் அதன் திருத்தங்களைச் சரிசெய்து ஆய்வுநூலாக வெளியிடப்படுகின்றது.

இது இலங்கையில் இருந்து வரும் இரு இதழ்களாக (ஆனி, மார்கழி) வெளியிடப்படும் மீளாய்வுச் (Refereed) சஞ்சிகையாகும். இது துறைசார் உள்நாட்டு, வெளிநாட்டுப் புலமையாளர்களால் மீளாய்வுச் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றது. ISSN: 2950-6611.

Scanned with OKEN Scanner